# ஹதீத்ஸ் கலை

இறைத்தூதர் ﷺ அவர்களுடைய நபித்தோழர்கள் நபிமொழிகளைக் கவனமாகக் கேட்டறிந்து ஞாபகத்தில் வைத்துக்கொள்வதில் மிகுந்த கவனம் செலுத்தினர். அவர்கள் இவ்விஷயத்தில் எந்த அளவிற்கு பேராசையுடையவர்களாக இருந்தார்கள் என்றால், அவர்கள் தங்களையே அதற்கான குழுக்களாகப் பிரித்துக்கொண்டு தவணை முறையில் இதனை மேற்கொண்டார்கள். ஒரு நபிமொழியில் கூறப்பட்டுள்ளது:

**عَنْ عُمَرَ، قَالَ: كُنْتُ أَنَا وَجَارٌ لِي مِنَ الأَنْصَارِ فِي بَنِي أُمَيَّةَ بْنِ زَيْدٍ وَهِيَ مِنْ عَوَالِي المَدِينَةِ وَكُنَّا نَتَنَاوَبُ النُّزُولَ عَلَى رَسُولِ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، يَنْزِلُ يَوْمًا وَأَنْزِلُ يَوْمًا، فَإِذَا نَزَلْتُ جِئْتُهُ بِخَبَرِ ذَلِكَ اليَوْمِ مِنَ الوَحْيِ وَغَيْرِهِ، وَإِذَا نَزَلَ فَعَلَ مِثْلَ ذَلِكَ** (البخاري، مسلم)

*பொருள்: ஹஜ்ரத் உமர் (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள், நானும் ஒரு அன்சாரி நபித்தோழரும் என்னுடைய அண்டை வீட்டாருடன் பனீ உமய்யா பின் ஜ்ஸைத் குடியிருப்பில் வசித்து வந்தோம். இந்த இடம் மதீனாவின் மேற்பகுதியில் இருந்தது. நாங்கள் இறைத்தூதர் ﷺ அவர்களிடம் மாறி மாறி வந்துகொண்டிருந்தோம். ஒரு நாள் அவர் வருவார், மற்றொரு நாள் நான் செல்வேன். எந்த நாளில் நான் வருவேனோ அன்றைய நாளின் செய்திகளான வஹீ அருளப்படுதல் மற்றும் வேறு விஷயங்களை நான் அவருக்கு எடுத்துக் கூறுவேன், அவ்வாறே, எந்த நாளில் அவர் வருவாரோ, அன்றைய தகவலை அவரும் எனக்கு எடுத்துக் கூறுவார். இவ்வகையில்தான், இறைத்தூதர் ﷺ அவர்கள் முஸ்லிம்களுக்கு நபிமொழிகளை மற்றவர்களுக்கு எடுத்துக் கூறும் பழக்கத்தினை ஊக்குவித்தார்கள். (புக்ஹாரி, முஸ்லிம்).*

**نَضَّرَ اللَّهُ امْرَأً سَمِعَ مِنَّا شَيْئًا فَبَلَّغَهُ كَمَا سَمِعَ، فَرُبَّ مُبَلِّغٍ أَوْعَى مِنْ سَامِعٍ** (أبو داوُد، الترمذي)

*பொருள்: நம்மிடமிருந்து ஒரு செய்தியைக்கேட்டு, அதனை அவர் எவ்வாறு கேட்டுக்கொண்டாரோ அதே வகையில் மற்றவர்களுக்கு எடுத்துக் கூறுபவருக்கு அல்லாஹ் தஆலா மகிழ்ச்சியும் நற்பேறும் அளிப்பானாக. ஏனெனில், ஒன்றைக் கேட்டு மற்றவர்களுக்கு எடுத்துரைப்பவர்கள் அதனைக் கேட்டறிந்தவர்களைவிட அதிகமாக விளக்கமும் பயனடைபவர்களாகவும் இருப்பார்கள் (அபூ தாவூத், திர்மிதி).* ஹஜ்ரத் அபூ ஹுரைரஹ் (ர) அவர்கள் அனைவரையும்விட அதிகமான நபிமொழிகளை அறிவித்திருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இறைத்தூதர் ﷺ அவர்களுடைய காலத்தில் மிகக் குறைவான நபிமொழிகளே எழுதிவைக்கப்பட்டு வந்தன. இதற்கான காரணம் என்னவெனில்,

www.uzaifaiqi.com

இறைத்தூதர்ﷺ அவர்கள் துவக்கத்தில் நபிமொழிகளை எழுதிவைப்பதைத் தடுத்து வந்தார்கள். காரணம், அவர்களுடைய ﷺ பொன்மொழிகள், விளக்கங்கள் மற்றும் சுன்னத்தான வழிமுறைகள் திருக்ஃகுர்ஆன் வசனங்களுடன் கலந்துவிடக்கூடாது, திருக்ஃகுர்ஆன் மற்றும் நபிமொழிகளில் வித்தியாசம் காண்பது குழப்பத்திற்கு ஆளாக்கிவிடக்கூடாது என்பதாகும். இதன் காரணமாகவே, நபித்தோழர்கள் நபிமொழிகளை ஞாபகத்தில் வைத்துக்கொள்வது மற்றும் அவற்றை நன்கு விளங்கிக்கொள்வதில் மிகுந்த கவனம் செலுத்தினர். அதன்பின், காலப்போக்கில் சில நபித்தோழர்களுக்கு நபிமொழிகளை எழுதிவைக்கும் அனுமதி அளிக்கப்பட்டது. இருப்பினும், நபித்தோழர்கள் திருக்ஃகுர்ஆன் மனனம் செய்வதில் அதிக முக்கியத்தவம் அளித்து வந்தனர்.

இந்த நிலை தொடர்ந்தது, காலப்போக்கில், சிலர் குழப்பங்களை விளைவிக்கத் துவங்கினர். சில கற்பனையான செய்திகளை இறைத்தூதர்ﷺ அவர்கள் கூறியதாக மக்களிடையே பரப்ப முயற்சித்தனர், இதனைப்பற்றி இறைத்தூதர்ﷺ அவர்கள் எச்சரித்தும் உள்ளார்கள்.

مَنْ كَذَبَ عَلَيَّ مُتَعَمِّدًا، فَلْيَتَبَوَّأْ مَقْعَدَهُ مِنَ النَّارِ (البخاري، مسلم)

*பொருள்: எவர் என்மீது தெரிந்தே ஒரு பொய்யினைப் புனைந்து கூறினார்களோ, அவர்கள் நரகத்தில் தங்களுக்கான இருப்பிடத்தை ஆக்கிக் கொண்டார்கள் (புக்ஹாரி, முஸ்லிம்).*

க்ஹலீஃபா உமர் பின் அப்துல் அஜ்ஸீஸ் (ரஹ்) அவர்கள் நபிமொழிகளைச் சேகரிக்குமாறு முறையாக ஆணையிட்டார்கள் மற்றும் அதற்கான பணியினை ஹஜ்ரத் அபூ பக்ர் பின் முஹம்மத் பின் ஹஜ்ஸ்ம் (ரஹ்) மற்றும் முஹம்மத் பின் ஷிஹாப் அஜ்ஸ்ஸுஹ்ரி (ரஹ்) அவர்களிடம் ஒப்படைத்தார்கள். இந்த இரு பெரியார்களும் நபிமொழிகளைச் சேகரிப்பதில் எல்லையற்ற கஷ்டங்களை எதிர்கொண்டார்கள். அக்காலக்கட்டத்தில் அவர்கள் நபிமொழிகளை எவ்வித ஆய்வும் மேற்கொள்ளாமலேயே சேகரித்தார்கள். இருப்பினும், நபிமொழிகளை எழுதிவைக்கும்பணி இறைத்தூதர்ﷺ அவர்கள் காலத்திலேயே துவங்கிவிட்டது என்பதை இங்கே தெளிவுபடுத்துவது முக்கியமானதாகும். ஏனெனில், இறைத்தூதர் ﷺ அவர்களுடைய காலத்திலேயே நபிமொழிகளின் தொகுப்புகளாக பலர் எழுதி வைத்திருந்தனர். ஹம்மாம் பின் முனப்பிஹ் (ரஹ்) அவர்களுடைய தொகுப்பு இதன் பலனாகவே தொகுக்கப்பட்டுள்ளது. ஆனால், இவையனைத்தும் ஒரு நூலாக தொகுத்து அளிக்கப்படத்துவங்கியது க்ஹலிஃபா உமர் பின் அப்துல் அஜ்ஸீஸ் (ரஹ்) அவர்களுடைய காலத்தில்தான். இதன்பின்

உலமாப்பெருமக்களின் ஒரு குழுவினர் இதற்காக முற்பட்டனர். அவர்கள் தங்களுடைய முன்னோர்களின் தொகுப்புக்களையெல்லாம் அய்வு செய்து, அவற்றிலிருந்து தங்களுடைய ஆய்வின் பலனாகத் தேர்ந்தெடுக்கபட்ட ஸஹீஹான நபிமொழிகளை மட்டும் தொகுத்தளித்து, வலிமையற்ற (ஜ்தஃீஈஃபான), புனைந்துரைக்கப்பட்ட நபிமொழிகளாகப் புழக்கத்தில் விடப்பட்டவைகளை ஒதுக்கித்தள்ளிவிட்டனர். இது நபிமொழிகளின் தொகுப்புக்கான மிகவும் முக்கியமான காலக்கட்டமாகும். முதன்முதலாகத் தொகுக்கப்பட்ட ஸஹீஹான நபிமொழிகளின் தொகுப்பாகவும், பல்வேறு தலைப்புகளின் தனித்தனி அத்தியாயங்களாகவும் தொகுத்தளிக்கப்பட்ட நூல் முஅத்தாவாகும். இதனை இமாம் மாலிக் (ரஹ் முறைவு:79 ஹிஜ்ரி) அவர்கள் நூலாகத் தொகுத்தளித்துள்ளார்கள்.

ஹிஜ்ரி மூன்றாம் நூற்றாண்டில் ஹதீத்ஸ் கலை வல்லுநர்களான உலமாப் பெருமக்கள் நபிமொழிகளைச் சேகரித்துத் தொகுத்தளிக்கும் பணியில் மிகவும் தீவிரமாகச் செயல்பட்டனர். இந்த நூற்றாண்டு நபிமொழிகளின் தொகுப்பின் பொற்காலம் என்று கருதப்படுகின்றது. இதே நூற்றாண்டில் நபிமொழிகளின் ஆறு பிரபலமான ஸஹீஹான நூல்கள் தொகுத்தளிக்கப் பட்டுள்ளன, அவையாவன: **ஸஹீஹ் புக்ஹாரி** மற்றும் **ஸஹீஹ் முஸ்லிம்**. இவ்விரண்டு நூல்களையும் தொகுத்தளித்துள்ள அறிஞர்கள் நபிமொழிகளைத் தெரிந்தெடுப்பதில் மிகவும் நுணுக்கமான அணுகுமுறை மற்றும் அமானிதப் பண்பினைக் கையாண்டுள்ளனர். ஆகவேதான், இந்த இரு தொகுப்புக்களையும் அனைத்து முஸ்லிம்களும் ஆதாரப்பூர்வமான மற்றும் நம்பிக்கைக்குரிய தொகுப்புகளாகவும் திருக்ஃகுர்ஆனுக்கு அடுத்ததாக உண்மையின் அடிப்படையிலான நூல்களாகவும் அந்தஸ்தும் அங்கீகாரமும் அளித்து அரவணைத்துள்ளனர்.

இதன்பிறகே, சுனன்களுடைய[1] நூல்கள் தொகுக்கப்பட்டன, உதாரணமாக, சுனன் அபூ தாவூத், சுனன் திர்மிதி, சுனன் நிசாயி, சுனன் இப்னு மாஜா. அதன்

1 சுனன் என்றால் இஸ்லாமிய மார்க்கச் சட்டக்கலையான ஃபிக்ஹின் அடிப்படையில் பல்வேறு தலைப்புகளின்கீழ், உதாரணமாக, கிதாபுல் ஈமான், கிதாபுத் தஹாரஹ், கிதாபுஸ் ஸலாத் என்று வெவ்வேறு அத்தியாயங்களாகப் பிரித்துத் தொகுத்தளிக்கப்பட்டுள்ள நூல்களாகும். இந்த நூல்கள் ஆத்ஸாருக் ஸஹாபா எனப்படும், அதாவது, நபித்தோழர்கள் அறிவிப்பாளர்களின் தொடர் ஆதாரம் இல்லாமலேயே தாங்கள் அறிந்த நபிமொழிகளை அறிவித்துள்ளனர் என்ற வகையில், தொகுப்பில் சேர்க்கப்படாது, அவ்வாறே, முர்சல் வகையிலான நபிமொழிகளும் இடம்பெறுவதில்லை. ஏனெனில், இவை முஹத்தித்ஸீன்களின் கருத்துப்படி சுன்னத் எனப்படும் நிலையில் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. இவ்வகையான ஒரு அறிவிப்பு எடுத்துரைக்கப்படுமானால், அது ஒரு சான்றாக மட்டுமே சேர்க்கப் படுகின்றது, உதாரணமாக, சுனன் அர்பஃஅ.

www.uzairiah.com

பின் முஸ்னதுகள்[2], உதாரணமாக, முஸ்னது அஹ்மது பின் ஹம்பல், முஸ்னது அபீ ஃஅவானஹ் ஆகியன. அத்துடன், முஸ்தக்ஹ்ரஜுகள்[3], உதாரணமாக, முஸ்தக்ஹ்ரஜ் ஃஅலா ஸஹீஹைன் அபீ ஃஅவானஹ் மற்றும் முஸ்தத்ரகாத்[4] எனப்படும் முஸ்தத்ரக் ஹாகிம் ஃஅலா ஸஹீஹைன் ஆகிய நூல்கள் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. இதன் அடிப்படையிலேயே, இல்மு முஸ்தலஹுல் ஹதீத்ஸ்[5] எனப்படும் ஹதித்ஸ் கலை நூல்கள் வெளிவந்துள்ளன. இவ்வாறே, சில நூல்கள் வலிமையற்ற நபிமொழிகளைப்பற்றியும் சில நூல்கள் மவ்ஜ்தூஉ எனப்படும் புனைந்துரைக்கப்பட்ட நபிமொழிகளைப்பற்றியும் எழுதப்பட்டுள்ளன. இல்மு ஜர்ஹு வத் தஃதீல்[6] எனும் நபிமொழிகளைப்பற்றிய ஆய்வு நூல்களும் எழுதப்பட்டுள்ளன. இந்தக் கலையின் பல்வேறு அம்சங்களைப்பற்றிய சில நூல்கள் பின்வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 1 | **அத்தாரீக்ஹ் அல்கபீர்** | ஆசிரியர் | இமாம் புக்ஹாரி |
| 2 | **அஜ்த்து.:அ.:பா வல் கபீர** | ஆசிரியர் | இமாம் அஃகீலி |
| 3 | **அல் மஜ்ரூஹீன்** | ஆசிரியர் | இப்னு ஹிப்பான் |
| 4 | **அல்காமில் .:பீ ஜ்து.:அ.:பா அல்கிபார்** | ஆசிரியர் | இமாம் புக்ஹாரி |
| 5 | **தஹ்ஜீபுல் கமால்** | ஆசிரியர் | ஹாஃபிஸ் முஸ்ஜ்ஸி |

2 மசானீது என்பது முஸ்னது எனும் சொல்லின் பன்மை, இது நபிமொழிகளின் அறிவிப்பாளர்களான நபித்தோழர்களின் பெயர்களோடு வரிசைமுறையில் தொகுத்தளிக்கப்படுகின்றது, அத்துடன் நபிமொழிகளில் கூறப்படும் செய்தி அல்லது பொருள் ஆகியவை இவ்விஷயத்தில் கருத்தில் கொள்ளப்பட்டமாட்டாது

3 முஸ்தக்ஹ்ரஜ் என்றால் ஒரு நபிமொழித்தொகுப்பாளர் பல்வேறு முஹத்தித்ஸீன்களுடைய தொகுப்புகளிலிருந்து தன்னுடைய தனிப்பட்ட ஆதாரங்கள், அணுகுமுறையின் அடிப்படையில் நபிமொழிகளைத் தேர்ந்தெடுத்து தொகுத்தளிக்கும் நூலாகும். இதில், மற்ற தொகுப்பாளர்களுடைய சனதுகளிலிருந்து இவருடைய ஆதாரங்கள் வேறுபட்டும் இருக்கும்.

4 முஸ்தத்ரக் என்பது மற்ற நபிமொழித் தொகுப்பாளர்கள் தங்களுடைய தொகுப்பில் சேர்க்காமல் விட்டுவிட்ட நபிமொழிகளைத் தொகுத்தளிக்கும் ஒரு நூலாகும். இவை, இவருடைய கருத்தப்படி, ஒரு நபிமொழித் தொகுப்பாளர் நிர்ணயிக்கும் விதிகளின்அடிப்படையிலேயே இருந்தும்ஏதோ காரணத்திற்காக அவரால் சேர்க்காமல் விடப்பட்ட நபிமொழிகளாகும். இஸ்தித்ராக் எனப்படும் இம்முறையின் விதி என்னவென்றால், இந்த நபிமொழிகளில் அறிவிப்பாளர்களின் ஆதாரம் (சனது) எந்தத் தொகுப்பிலிருந்து அந்தக் குறிப்பிட்ட நபிமொழித் தொகுப்பாளர் எடுத்துரைக்கின்றாரோ அதே ஆதாரங்களின் அடிப்படையிலேயே இருக்கவேண்டும்.

5 ஆதாரங்களின் எந்த அடிப்படைகள் மற்றும் விதிகளின் அடிப்படையில் நபிமொழிகளின் அறிவிப்பாளர்களின் பெயர்களைக்கொண்ட ஆதாரம் மற்றும் நபிமொழியின் வாசகங்கள் ஏற்றுக்கொள்ளவோ நிராகரிக்கவோ படுகின்றனவோ அவற்றைப்பற்றிய அறிவும் அனுபவமும் பெற்றிருத்தல்

6 இந்தக் கலை நபிமொழி அறிவிப்பாளர்களுடைய நன்மையான தீமையான பழக்கங்கள், அவர்களுடைய ஏற்புடைமை, நேர்மை ஆகியவற்றை ஆய்ந்தறியும் கலையாகும். இதன் அடிப்படையில், அவர்களால் அறிவிக்கப்பட்ட நபிமொழிகள் ஏற்றுக்காள்ளவோ அல்லது அவர்களுடைய ஏற்புடைமை நிராகரிக்கவோ படுகின்றன, அவர்களால் அறிவிக்கப்பட்ட நபிமொழிகளும் நிராகரிக்கப்படுகின்றன.

www.uzarfalah.com

| | | | |
|---|---|---|---|
| **6** | **மீஜ்ஸானுல் இஃதிதால்** | ஆசிரியர் | இமாம் த்ஜஹபி |
| **7** | **லிசானுல் மீஜ்ஸான்** | ஆசிரியர் | இப்னு ஹஜர் |
| **8** | **தஹ்ஜீபுத் தஹ்ஜ்ஸீப்** | ஆசிரியர் | இப்னு ஹஜர் |
| **9** | **தஃக்ரீபுத் தஹ்ஜ்ஸீப்** | ஆசிரியர் | இப்னு ஹஜர் |

இவற்றைத்தவிர எண்ணற்ற நூல்களும் உள்ளன.

இதன்பின், இந்த நூல்களின் விளக்கவுரைகள், விரிவுரைகள் மற்றும் மூல நூல்கள் சுருக்கமாக்கப்பட்ட தொகுப்புகளின் காலம் வந்தது. உலமாப் பெருமக்கள் இந்நூல்களின் விரிவுரைகளை எழுதினர், உதாரணமாக, ஜ்ஸர்ஃகானி (ரஹ்) அவர்கள் முஅத்தாவின் விரிவுரையினை எழுதினார்கள், இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் ஸஹீஹ் புக்ஹாரியின் விரிவுரையினை எழுதினார்கள், இமாம் நவவி (ரஹ்) அவர்கள் ஸஹீஹ் முஸ்லிமின் விரிவுரையினை எழுதினார்கள். இவ்வாறே, மற்ற ஸஹீஹான நபிமொழித் தொகுப்புக்களான ஸீஹாஹ் சித்தஹ் எனப்படும் அந்த ஆறு நபிமொழித் தொகுக்புக்களின் விரிவுரைகள் எழுதப்பட்டன. இவற்றைத்தவிர, உலமாப் பெருமக்கள் நபிமொழிகளின் எண்ணற்றத் தொகுப்புக்களின் விரிவுரைகளையும் எழுதியுள்ளனர்.

முஸ்லிம்கள் கடந்த காலத்திலிருந்து இன்று வரையிலும் ஒவ்வொரு காலக் கட்டத்திலும் சுன்னத்துகளைப் பேணிப்பாதுகாத்து வந்துள்ளர். ஏனெனில், அவை இஸ்லாமிய அடிப்படை அதாரங்கள் மற்றும் மார்க்க அடிப்படைகளை வகுப்பதில் இரண்டாவது ஆதாரமாக விளங்குகின்றன. இதன் மூலம் அனைத்துத் துறைகளிலும் இஸ்லாமியக் காலாச்சாரத்தின் அடிப்படை விதிகள் நிர்ணயிக்கவும் கண்டறியவும் படுகின்றன.

www.uzairfalah.com

**மார்க்கச்சட்டக் கலை (ஃபிக்ஹ்)**

மார்க்கச் சட்டக்கலை (ஃபிக்ஹ்) என்பது விரிவான ஆதாரங்களின் அடிப்படையில் ஷரிஃஅத் சட்டங்களுக்கேற்ப கடமைகள் மற்றும் அனைத்து அமல்களும் நிறைவேற்றவேண்டிய விதிமுறைகள், சட்டங்களைப்பற்றி, உதாரணமாக, ஹலாலான, ஹராமானவைகளைப் பற்றியும், சுன்னத்தான, விரும்பத்தகாத, ஏற்புடைய அமைப்பிலான விஷயங்களைப்பற்றியும் அறிந்துகொள்வதற்கு உதவியாக இருக்கும் ஒரு கலையாகும்.

இறைத்தூதர் ﷺ அவர்களுக்குப் பிறகு நபித்தோழர்கள், ஃபிக்ஹு எனும் மார்க்கச்சட்டக் கலையினை முக்கியத்துவமளித்து முனைப்புடன் கையாண்டனர். அவர்களில் ஒவ்வொருவரும் மார்க்கச் சட்டக்கலையின் ஒவ்வொரு பிரிவிலும் தனிச்சிறப்பும் திறமையும் பெற்றிருந்தனர். ஹஜ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ர) அவர்கள் ஃபிக்ஹு கலையில் திறமைபெற்று விளங்கினார்கள். ஹஜ்ரத் முஃஆத்ஜ் பின் ஜபல் (ர) அவர்கள் வாரிசுகளின் உரிமை மற்றும் பங்கீட்டில் மிகுந்த அறிவும் அனுபவமும் பெற்றிருந்தார்கள்.

மதீனா முனவ்வரஹ்வில் குடியிருந்த பெரும்பாலான நபித்தோழர்கள் ஃபத்வா வழங்கிவந்தார்கள். உதாரணமாக, ஹஜ்ரத் அபூ பக்ர் (ர) அவர்கள், ஹஜ்ரத் உமர் (ர) அவர்கள், ஹஜ்ரத் உத்ஸ்மான் (ர) அவர்கள், ஹஜ்ரத் அலி (ர) அவர்கள், ஹஜ்ரத் ஜ்ஸைத் பின் த்ஸாபித் (ர) அவர்கள் மற்றும் பெண்களில் ஹஜ்ரத் ஆயிஷா (ர) அவர்கள் மற்றும் ஹஜ்ரத் உம்மு சலமஹ் (ர) அவர்கள். இந்த நபித்தோழர்களிடமிருந்து பெரும்பாலான தாபியீன்கள் கல்வி கற்றுள்ளார்கள், அவர்களுள் ஏழு மார்க்கச்சட்ட அறிஞர்கள் பிரபலமடைந்துள்ளனர். அவர்கள் ஏழு ஃபுஃகஹாக்கள் (மார்க்கச்சட்ட அறிஞர்கள்) என்று அழைக்கப்படுகின்றனர், அவர்களுடைய பெயர்கள் கீழ்வருமாறு:

1 **உர்வஹ் பின் ஜ்ஸுு பைர் (ரஹ்)**
(மறைவு ஹிஜ்ரி 93) இவர்கள் தன்னுடைய சிற்றன்னையான ஹஜ்ரத் ஆயிஷா (ர) அவர்களிடமிருந்து ஃபிக்ஹுு கலையினைக் கற்றறிந்தார்கள்

2 **சயீத் பின் முசய்யிப் (ரஹ்)**
(மறைவு ஹிஜ்ரி 93) இவர்கள் ஹஜ்ரத் அபூ ஹுுரைரஹ் (ர) அவர்களுடைய மகளை மணந்துள்ளார்கள், இவர்கள் ஹஜ்ரத் உமர் பின் க்ஹத்தாப் (ர) அவர்கள் மற்றும் ஹஜ்ரத் உத்ஸ்மான் பின் ஃஅஃப்பான் (ர) அவர்களுடைய ஃபத்வாக்களை மனப்பாடமாக ஞாபகத்தில் வைத்திருந்தார்கள்.

3 **ஃஉபைதுல்லாஹ் பின் ஃஉதபஹ் பின் மஸ்ஃஊத் (ரஹ்)**
(மறைவு ஹிஜ்ரி 102) இவர்கள் ஒரு ஆதாரப்பூர்வமான மார்க்கச்சட்ட அறிஞர் மற்றும் மிகுந்த மார்க்க அறிவும் அனுபவமும் உள்ளவராகத் திகழ்ந்தார்கள்

4 **அபூ பக்ர் பின் அப்துர் ரஹ்மான் பின் ஹாரித்ஸ் (ரஹ்)**
(மறைவு ஹிஜ்ரி 94) மார்க்கச்சட்ட அறிஞர் மற்றும் மிகவும் இறைவணக்கம் மற்றும் வழிபாட்டில் ஈடுபாடு கொண்டவர்

5 **சுலைமான் பின் யசார் (ரஹ்)**
(மறைவு ஹிஜ்ரி 107) இறைத்தூதர் ﷺ அவர்களுடைய மனைவியான ஹஜ்ரத் மய்மூனஹ் (ர) அவர்களுடைய அடிமையாக இருந்தவர்

6 **ஃகாசிம் பின் முஹம்மத் பின் அபீ பக்ர் (ரஹ்)**
(மறைவு ஹிஜ்ரி 108) ஹஜ்ரத் ஆயிஷா (ர) அவர்கள் இவர்களுடைய அத்தையாவார்கள்

7 **கஹ்ாரிஜஹ் பின் ஜ்ஸைத் பின் த்ஸாபித் (ரஹ்)**
(மறைவு ஹிஜ்ரி 100) ஹஜ்ரத் அபூ பக்ர் ஸித்தீஃக் (ர) அவர்களுடைய காலத்தில் திருக்ஃகுர்ஆன் வசனங்களைத் தொத்தளித்த மிகப்பெரும் நபித்தோழரான ஹஜ்ரத் ஜ்ஸைத் பின் த்ஸாபித் (ர) அவர்களுடைய மகன் ஆவார்

www.uzairfalah.com

மக்காஹ் முகர்ரமஹ்வில் மார்க்கச்சட்டம் மற்றும் ஃபத்வா முறையின் முன்னோடியாக விளங்கிய மிகப் பிரபலமான நபித்தோழர் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ர) ஆவார். ஓ அல்லாஹ், இவருக்கு மார்க்கத்தின் விளக் கங்களை அளிப்பாயாக மற்றும் அவருக்கு முழுமையான திருக்ஃகுர்ஆன் வசனங்களின் விளக்கத்தையும் அளிப்பாயாக என்று இறைத்தூதர் ﷺ அவர் களே அவர்களுக்காக துஆ கேட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் கடைபிடித்த ஃபத்வா முறையின் சீடர்களுள் பிரபலமாக விளங்கியவர்க ளுள் இக்ரிமஹ், ஃஅதா மற்றும் த்தாவூஸ் (ரஹ்) ஆகியோர் அடங்குவர்.

சஃபா நகரில் ஹஜ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஃஊத் (ர) அவர்கள், ஹஜ்ரத் அலி பின் அபீ தாலிப் (ர) அவர்கள், ஹஜ்ரத் அபூமூசா அஷ்ஃஅரீ (ர) அவர் கள் மற்றும் சில நபித்தோழர்களும் ஃபத்வா வழங்கி வந்தனர். இந்த நபித் தோழர்களுடைய மாணவர்களாகத் திகழ்ந்தவர்கள் கீழ்வருமாறு:

1 **அல்ஃகமஹ் பின் ஃகய்ஸ்** (மறைவு ஹிஜ்ரி 62)

2 **அல் அஸ்வத் பின் யஜ்ஸீத் அந்நக்ஹஈ** (மறைவு ஹிஜ்ரி 75)

3 **ஃகாஜ்தி ஷுரைஹ் பின் ஹாரித்ஸ்** (மறைவு ஹிஜ்ரி 82) மற்றும் பலர்.

பஸரஹ்வில் ஹஜ்ரத் அனஸ் பின் மாலிக் (ர) அவர்கள் நீண்ட காலம் வரை இப்பணியினை மேற்கொண்டார்கள், அவர்களுடைய மாணவர்களுள் சிலர் ஹஸன் பஸரி (ரஹ்) மற்றும் இப்னு சீரின் (ரஹ்) ஆகியோர் அடங்குவர்.

சிரியாவில் அபூ இத்ரிஸ் அல் க்ஹவ்லானி அவர்கள் மற்றும் அவருடைய மாணவர்களான உமர் பின் அப்துல் அஜ்ஸீஸ் மற்றும் ரஜா பின் ஹயவஹ் ஆகியோர் இருந்தனர்.

எகிப்தில் ஹஜ்ரத் அம்ரு பின் ஃஆஸ் (ர) அவர்கள், ஹஜ்ரத் உஃக்பஹ் பின் ஃஆமிர் (ர) அவர்கள் போன்ற மாபெரும் நபித்தோழர்கள் இருந்தனர். அவர்களுடைய மாணவரான ஹஜ்ரத் யஜ்ஸீத் பின் ஹபீப் (ரஹ்) அவர்கள் எகிப்தில் ஹலால் மற்றும் ஹராமானவைகளைப்பற்றி அறிவுப்பூர்வமாக விவாதித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. எகிப்தில் மிகப்பெரிய மார்க்கச் சட்ட அறிஞர் லைஸ் பின் சஃஅது (ரஹ்) அவர்களும் இருந்தார்கள். அவர் களைப்பற்றிக் கூறுப்படுவதாவது, அவர்களுடைய மாணவர்கள் அவர்களு டைய மார்க்கச்சட்டக்கலையின் கொள்கைகள் மற்றும் கருத்துக்களைப் பாழாக்கிவிடாதிருந்தார்களேயானால், லைஸ் பின் சஃஅது (ரஹ்) அவர்கள் இமாம் மாலிக்கைவிடவும் பெரிய மார்க்கச்சட்ட அறிஞராகத் திகழ்ந் திருப்பார்கள். அவர்களுடைய மாணவர்கள் அவர்களுடைய ஃபிக்ஹு சம்பந்தப்பட்டக் களஞ்சியங்களைப் பாதுகாத்து வைக்கவில்லை, மற்ற மார்க்கச்சட்ட அறிஞர்களுடைய மாணணவர்கள் செய்ததுபோன்று அதனை மற்றவர்களிடத்தில் எடுத்துரைக்கவும் இல்லை.

www.uzaifalah.com

## நான்கு மத்ஹபுகள்

### ஹனஃபி மத்ஹப்

இந்த மத்ஹபுடைய ஆதாரம் கூஃபாவில் பிரபலமடைந்திருந்த நபித் தோழரான ஹஜ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ர) அவர்களுடைய கருத்து மற்றும் கொள்கைகளின் அடிப்படையிலானதாகும். இந்த மத்ஹபைத் தோற்றுவித்தவர் இமாம் அபூ ஹனீஃபா நுஃமான் பின் த்ஸாபித் (ரஹ்) அவர்களாவார். அவருடைய பிரபல மாணவரான அபூ யூசுஃப் மற்றும் முஹம்மத் பின் ஹசன் அஷ்ஷைபானி (ரஹ்) அவர்கள் தன்னுடைய ஆசிரியரான இமாம் அபூ ஹனீஃபா (ரஹ்) அவர்களுடைய கருத்துக்களின் அடிப்படையிலான மார்க்கச்சட்டங்களை (ஃபிக்ஹு) தொகுத்தளித்துள்ளார்கள். இந்த மத்ஹபின் அடிப்படையிலான நூல்களாவன: அல் மப்சூத் வஸ்ஸியாதாத் மற்றும் அல் ஜாமிஃஉல் கபீர் மற்றும் ஸகீர் அகியனவாகும்.

### மாலிகி மத்ஹப்

இந்த மத்ஹபுடைய துவக்கம் மதீனா முனவ்வாஹ்வில் ஆனது, இது மதீனாவின் பிரபல மார்க்கச்சட்ட அறிஞரான ஹஜ்ரத் அனஸ் பின் மாலிக் (ர) அவர்களோடு தொடர்புடையதாகும். இமாம் மாலிக் (ர) அவர்களுடைய நபிமொழிகளின் தொகுப்பான **முஅத்தா** மார்க்கச்சட்டங்களின் பல்வேறு தலைப்புகளின் அடிப்படையில் அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டு தொகுத்தளிக்கப்பட்டுள்ளது. அவர்களுடைய பிரபல மாணவரான ஹஜ்ரத் அப்துர் ரஹ்மான் பின் ஃகாசிம் மிஸ்ரி அவர்களாவார் மற்றும் அசத் பின் ஃபுராத் ஆப்பிரிக்காவில் பிறந்து வளர்ந்து மதீனா முனவ்வராஹ்விற்கு வந்து இமாம் மாலிக் (ர) அவர்களிடம் நேரடியாக முஅத்தாவை வாசிக்கக் கேட்டு, மீண்டும் எகிப்தில் வந்து ஹஜ்ரத் அப்துர் ரஹ்மான் பின் ஃகாசிம் மிஸ்ரி அவர்களிடமே முஅத்தா அடிப்படையிலான மார்க்கச்சட்டங்களின் விளக்கங்களைப்பெற்றார்கள்.

### ஷாஃபிஈ மத்ஹப்

இந்த மத்ஹபைத் தோற்றுவித்தவர் இமாம் முஹம்மத் பின் இத்ரீஸ் ஷாஃபிஈ (ரஹ்) அவர்களாவார். இவர் ஒரு மிகப்பெரிய மார்க்கச்சட்ட அறிஞராவார். இவருடைய மத்ஹபு இரண்டு காலக்கட்டங்களைக் கண்டுள்ளது. முதன்முதலில் முதற்கட்டமாக அவர்கள் ஈராக்கில் தன்னுடைய மத்ஹபினை பிரபலப்படுத்தியதோடு அவருடைய நூலான **அல்ஹுஜ்ஜஹ்**வைத் தொகுத்தளித்தார்கள். அவர்கள் எகிப்திற்கு இரண்டுமுறை பயணம்

www.uzairfalah.com

மேற்கொண்டார்கள், இரண்டாவது முறையாக அங்கேயே தங்கிவிட்டார்கள், அங்கேயே மரணமும் அடைந்துவிட்டார்கள். அவர்கள் தன்னுடைய மத்ஹபில் அக்காலக்கட்டத்தில் அதிகமாகவே மாற்றங்களைக் கொண்டுவந்துள்ளார்கள், இதன் காரணமாகவே, இது அவருடைய புதிய மத்ஹபாகக் கருதப்படுகின்றது. அவர்கள் கூறுகிறார்கள், ஒரு விஷயத்தில் அதனைப்பற்றிய ஸஹீஹான நபிமொழி ஆதாரமாகக் கிடைத்துவிட்டால் அதுவே என்னுடைய மத்ஹபுமாகும்.

இமாம் ஷாஃபிஈ (ரஹ்) அவர்கள் எகிப்தில் மார்க்கச்சட்டக் கலை மட்டுமல்லாது பல்வேறு தலைப்புகளிலும் நூல்களைத் தொகுத்தளித்துள்ளார்கள். உதாரணமாக, **கிதாபுல் உம்மு**, இது ஒரு மிக முக்கியமான ஃபிக்ஹு கலைக்களஞ்சியமாகும். அவர்கள் உசூலுல் ஃபிஃக்ஹ் எனப்படும் மார்க்கச்சட்டக்கலையின் அடிப்படைகளைப்பற்றிய விதிமுறைகளைத் தொகுத்தளித்துள்ளதோடு அவற்றை **அர்ரிசாலஹ்** எனும் விரிவான ஒருநூலில் தொகுத்துள்ளார்கள். அவர்களுடைய பிரபலமான மாணவர்களில், அபூத்ஸவ்ர் பின் ரபீஃஉ (மறைவு ஹிஜ்ரி 270), யூசுஃப் பின் யஹ்யா அல் புவைத்தி (மறைவு ஹிஜ்ரி 231), மற்றும் இஸ்மாயீல் பின் யஹ்யா அல் முஜ்ஸனி முக்கியமானவர்கள்.

**ஹம்பலி மத்ஹப்**

இந்த மத்ஹபு பிரபல மார்க்கச்சட்ட அறிஞரான ஹஜ்ரத் அஹ்மத் பின் ஹம்பல் (ர) அவர்களோடு தொடர்புடையதாகும். இந்த மத்ஹபுடைய அடிப்படை நபிமொழிகள் மற்றும் நபித்தோழர்களுடைய அறிவிப்புகள், கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டதாகும். அவர்களுடைய அணுகுமுறையானது ஒரு வலிமையற்ற (ஜ்தஃஈபான ஹதீத்ஸ்) ஆதாரமாகக் கூறப்படும் நிலையில் நபித்தேழர்களுடைய கருத்துக்களுக்கு முன்னுரிமை அளிக்கப் படவேண்டும் என்பதாகும். இமாம் அஹ்மத் பின் ஹம்பல் (ர) அவர்கள் தன்னுடைய மத்ஹபின் அடிப்படை ஆதாரமாக விளங்கும் வகையில் எந்த ஒரு நூலையும் தொகுத்தளிக்கவில்லை. ஆனால், அவர்களுடைய மாணவர்கள் அவருடைய மத்ஹபின் கொள்கைகள் மற்றும் விளக்கங்களை அளித்துள்ளனர். இவ்வகையில், அவருடைய இந்த மத்ஹபு காப்பாற்றப் பட்டுவிட்டது. அவர்களுடைய பிரபலமான மாணவர்களில் முக்கியமானவர்கள் அவருடைய மூத்த மகனான ஸாலிஹ் பின் அஹ்மத் பின் ஹம்பல் (ரஹ்) மற்றும் அப்துல்லாஹ் பின் அஹ்மத் பின் ஹம்பல் (ரஹ்), இவர்கள் தன்னுடைய தந்தையாருடைய முஸ்னதைத் தொகுத்தளித்துள்ளார்கள். அவருடைய மாணவர் சுனன் அபு தாவூதின் தொகுப்பாளராவார்.

இவ்வகையில், இஸ்லாமிய மார்க்கச்சட்டக்கலை இஸ்லாமியக் கலாச் சாரத்தின் கட்டமைப்பு மற்றும் அதன் வளர்ச்சியில் மிகவும் முக்கியப் பங்

www.uzairfalah.com

கினை ஆற்றியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அக்காலத்து மார்க்கச்சட்ட அறிஞர்கள் தங்களுடைய காலத்தின் பல்வேறு நிகழ்வுகள் மற்றும் பிரச்சினைகளைப்பற்றிய சட்டங்களைப்பற்றி விளக்கமளித்துள்ளார்கள், அத்துடன், அவர்களுடைய காலத்தில் பெறப்படாத சில பிரச்சினைகளைப்பற்றியும் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். இந்த அணுகுமுறை ஹனஃபி மத்ஹபுடைய அணுகுமுறையின் தனிப்பண்பாகவும் அமைகின்றது.

* * *

www;uzairfalah.com